தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2022

**“எமது போராட்ட வாழ்வின் உண்மைகளைக் கலை, இலக்கியப் படைப்புகள் தரிசித்து நிற்க வேண்டும்.”**
-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்-

ஈழத்தமிழினம் தன்னிறைவு கொண்ட தாயகத்தையும் தொன்மையான மொழியையும் தனித்துவமான வரலாற்றுப் பாரம்பரியங்கள், கலை, பண்பாடுகளையும் கொண்டிருந்த வையகத்தின் மூத்த இனம். இவற்றை எம்மிடமிருந்து பறித்து எம்மினத்தை அழிக்கின்ற கொடுமையான போரை எதிர்த்துப் போராட வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டோம். அத்தகைய விடுதலைப் போரிலே தங்கள் உயிர்களை ஈகம் செய்த மாவீரர்களின் தியாகங்களை என்றென்றும் போற்ற வேண்டியது தமிழர்களாகிய எமது கடமையாகும்.

சுவிஸ் நாட்டில் வாழ்ந்து வருகின்ற தமிழ்ச்சிறார்களும் இளையவர்களும் தாய்மொழியினதும் தாயகத்தினதும் மாவீரர்களினதும் சிறப்புகளை அறிந்து கொள்வதற்கும் அவர்களின் பேச்சாற்றலை வளர்த்தெடுக்கவும் ஆண்டுதோறும் தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி நடாத்தப்பெறுகின்றது.

பேச்சுப்போட்டியில் பங்குபற்றும் போட்டியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக 2022 ஆம் ஆண்டு முதல் கீழ்க்காணும் புதிய விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

1. 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான போட்டிகள் மூன்று பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளன:
    - 18 தொடக்கம் 22 வயது வரையான பிரிவு
    - 23 தொடக்கம் 30 வயது வரையான பிரிவு
    - 31 வயதும் அதற்கு மேற்பட்டோருக்குமான பிரிவு

2. இவர்களுள் 18 – 22 வயது வரையான பிரிவுக்கு பேச்சு ஆக்கம் வழங்கப்படும். ஏனைய இரண்டு பிரிவுகளும் தாமாகவோ அல்லது தமக்கு அறிமுகமானவர்களுடன் இணைந்தோ பேச்சுகளை ஆக்குதல் வேண்டும். நேரம் 4 – 6 நிமிடங்கள்.

3. தாமாகப் பேச்சினை ஆக்கும் பிரிவுகளுக்குப் பேச்சினை நினைவில் வைத்துப் பேசுதல் (மனனம்) எதிர்பார்க்கப்படமாட்டாது.

4. 13 வயதுப்பிரிவிலே முதலாம் இடத்தைப்பெறும் வெற்றியாளர் தமிழீழத் தேசிய மாவீரர் நாள் நிகழ்விலும் 15 வயதுப்பிரிவிலே முதலாம் இடத்தைப்பெறும் வெற்றியாளர் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் நிகழ்விலும் 17 வயதுப்பிரிவிலே முதலாம் இடத்தைப் பெறும் வெற்றியாளர் எழுச்சிக்குயில் நிகழ்விலும் 18 தொடக்கம் 22 வயது வரையான பிரிவிலே முதலாம் இடத்தைப்பெறும் வெற்றியாளர் முத்தமிழ் விழா நிகழ்விலும் 23 தொடக்கம் 30 வரையான பிரிவிலே முதலாம் இடத்தைப்பெறும் வெற்றியாளர் நாட்டியமயில்/இசைக்குயில் நிகழ்விலும் 31 வயதும் அதற்கு மேற்பட்டோருக்குமான பிரிவிலே முதலாம் இடத்தைப்பெறும் வெற்றியாளர் புத்தாண்டும் புதுநிமிர்வும் நிகழ்விலும் பேசுகின்ற வாய்ப்பினைப் பெறுவார்கள். அத்தோடு, மாநிலங்களில் நடைபெறுகின்ற எழுச்சி நிகழ்வுகளில் பேசுகின்ற வாய்ப்பு அந்தந்த வயதுப்பிரிவுகளின் தலைப்புகளுக்கு ஏற்ப வழங்கப்படும்.

இப்பேச்சுப்போட்டிக்கு வயதுப்பிரிவின் அடிப்படையில் விரும்பிய அனைவரும் விண்ணப்பிக்கலாம். வலய மட்டத்தில் நடாத்தப்பெறும் பேச்சுப்போட்டிகள் (5 – 11 வயதுப்பிரிவு) **19.11.2022 சனிக்கிழமை பேர்ண், சூரிச்** ஆகிய மாநகரங்களில் நடைபெறும். 13 வயது தொடக்கம் 31 வயதும் அதற்கு மேற்பட்டவர்களுக்குமான பேச்சுப்போட்டிகள் **20.11.2022 ஞாயிற்றுக்கிழமை** நாடுதழுவிய வகையில் இவ்வாண்டு **சூரிச் மாநகரில்** நடைபெறும்.

**தரப்பட்ட பேச்சுகளில் மாற்றம் செய்தல் அல்லது வேறு பேச்சுகளைப் பேசுதல் ஏற்றுக்கொள்ளப்பெறமாட்டாது.**

**பேச்சுப்போட்டியின் முடிவுகள் பேச்சுப் போட்டி நடைபெறும் நாளுக்குரிய அனைத்துப் போட்டிகளும் நிறைவுபெற்றதும் மண்டபத்திலேயே அறிவிக்கப்படும்.**

பங்குபற்றும் அனைவருக்கும் பங்குபற்றியமைக்கான சான்றிதழும் நினைவுப்பரிசும் வழங்கப்பெறுவதுடன், வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் **27.11.2022 ஞாயிற்றுக்கிழமை** பிறிபேர்க் நகரில் நடைபெறும் தேசிய மாவீரர்நாள் நிகழ்வில் வழங்கப்பெறும். ஏதாவதொரு வயதுப்பிரிவில் மூன்று பேருக்குக் குறைவான போட்டியாளர்கள் பங்குபற்றுமிடத்து, அவர்களுக்கு நினைவுப் பரிசும் சான்றிதழும் மட்டும் வழங்கப்பெறும். வெற்றிப்பரிசில்கள் வழங்கப்பெறமாட்டாது.

**ம.ப.பா.**

பேச்சுப்போட்டியில் பங்குபற்றுபவர்கள் தங்கள் வயதுப்பிரிவிற்குரிய பேச்சினைத் தமிழர் நினைவேந்தல் அகவத்தின் www.trfswiss.com, www.maaveerarnal.ch ஆகிய இணையத்தளங்களிலும் தமிழர் நினைவேந்தல் அகவத்தின் முகநூலிலும் தமிழ்ப்பள்ளி முதல்வர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு நாள்: 02.11.2022 புதன்கிழமை**

போட்டிக் கட்டணம்: 15 CHF

மாணவர்கள் முழுமைப்படுத்தப்பெற்ற விண்ணப்பப் படிவத்தினையும் போட்டிக் கட்டணத்தினையும் வகுப்பாசிரியர் / தமிழ்ப்பள்ளி முதல்வரிடம் வழங்குதல் வேண்டும். போட்டிக்கட்டணம் செலுத்திய பத்திரத்தின் பிரதியினையும் இப்பேச்சுப்போட்டியில் முதன்முறையாகப் பங்குபற்றுபவர்கள் தங்கள் வதிவிட அனுமதிப்பத்திரத்தின் பிரதியினையும் இவ்விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:**

Tamilar Remembrance Foundation – Swiss
Postfach 439
4528 Zuchwil

**தபாற்கணக்கு எண்:** CH 07 0900 0000 6003 4553 3

**தொடர்புகளுக்கு: 076 528 71 12, 076 426 27 80**

## தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2022
## வயதுப்பிரிவும் பேச்சுகளின் தலைப்புகளும்

| வயதுப்பிரிவு | பேச்சுகளின் தலைப்புகள் |
|---|---|
| 5 வயதுப் பிரிவு<br>(01.01.2017 - 31.12.2017 வரையில் பிறந்தோர்) | தமிழ் என் அடையாளம் |
| 6 வயதுப் பிரிவு<br>(01.01.2016 - 31.12.2016 வரையில் பிறந்தோர்) | வாகை |
| 7 வயதுப் பிரிவு<br>(01.01.2015 - 31.12.2015 வரையில் பிறந்தோர்) | நாட்டுப்பற்று |
| 8 வயதுப் பிரிவு<br>(01.01.2014 - 31.12.2014 வரையில் பிறந்தோர்) | உயிரினும் உயர்ந்த எம் தாய்நாடு |
| 9 வயதுப் பிரிவு<br>(01.01.2013 - 31.12.2013 வரையில் பிறந்தோர்) | தியாக தீபம் திலீபன் மாமா |
| 10 வயதுப் பிரிவு<br>(01.01.2012 - 31.12.2012 வரையில் பிறந்தோர்) | கரும்புலி மில்லர் மாமா |
| 11 வயதுப் பிரிவு<br>(01.01.2011 - 31.12.2011 வரையில் பிறந்தோர்) | இரண்டாம் லெப்டினன்ட் மாலதி |
| 13 வயதுப் பிரிவு<br>(01.01.2009 - 31.12.2010 வரையில் பிறந்தோர்) | மாவீரம் தமிழீழ மண்ணின் மகுடம் |
| 15 வயதுப் பிரிவு<br>(01.01.2007 - 31.12.2008 வரையில் பிறந்தோர்) | விடுதலை தேடும் மாந்தர்க்கெல்லாம் எடுத்துக்காட்டு தமிழீழத் தேசியத் தலைவர் |
| 17 வயதுப் பிரிவு<br>(01.01.2005 - 31.12.2006 வரையில் பிறந்தோர்) | மே பதினெட்டின் மெய்ப்பொருள் |
| 18 தொடக்கம் 22 வயது வரை<br>(01.01.2000 - 31.12.2004 வரையில் பிறந்தோர்) | தடை உடைத்துத் தடம் பதித்தோர் |
| 23 தொடக்கம் 30 வயது வரை<br>(01.01.1992 - 31.12.1999 வரையில் பிறந்தோர்) | இளையோரே எழுச்சி கொள்வீர்<br>அறுவடையின் காலம் உம் கையில்! |
| 31 வயதும் அதற்கு மேற்பட்டோரும்<br>(31.12.1991ஆம் நாளும் அதற்கு முன்பும் பிறந்தோர்) | தமிழீழத்தின் விடுதலையே தமிழினத்தின் விடுதலை |